தினமணி
01.11.2015

# கல்லூரியுடன் கணினி நிறுவனம் புரிந்துணர்வு ஒப்பந்தம்



பண்ணாரி அம்மன் கல்லூரியுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்ட ஆரக்கிள் கணினி நிறுவன அலுவலர் ஜெயந்தன் சாலமன், கல்லூரி முதல்வர் த.சரவணன் உள்ளிட்டோர்.

**சத்தியமங்கலம், அக். 31:** பண்ணாரி அம்மன் தொழில்நுட்பக் கல்லூரியுடன் ஆரக்கிள் கணினி நிறுவனம் வெள்ளிக்கிழமை புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டது.

இந்நிகழ்ச்சியில், பண்ணாரி அம்மன் கல்லூரி முதல்வர் த.சரவணன், கட்டடவியல் துறைத் தலைவர் ஜி.அனுஷா, ஆரக்கிள் கணினி நிறுவனம் சார்பில் ஜெயந்தன் சாலமன் ஆகியோர் பங்கேற்றனர்.

இந்த ஒப்பந்தத்தின்படி, தொழிற்சாலை, சர்வதேச தரத்தில் கல்வி சார்ந்த மென்பொருள் பயிற்சியை ஆசிரியர், மாணவர்களுக்கு வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.